( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-04


# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................................



நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01) மிகக் கூடிய மற்றும் மிகக் குறைந்த சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட இரு வடிவங்களையும் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 


(02) A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை தொடர்பான மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

A  B 

(1) வேறுபாடுகளின் எண்ணிக்கை இரண்டாகும்.

(2) வேறுபாடுகளின் எண்ணிக்கை ஒன்றாகும்.

(3) எந்தவித வேறுபாடுகளும் இல்லை.

(03) 

இவ்வுருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்குப் பொருத்தமான பகுதிகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 


(04) வயதுகள் படிப்படியாகக் கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதினால் சரிநடுவில் வரும் சொல்,


**பெரியப்பா , அண்ணா , பாட்டன் , சித்தப்பா , அப்பா**

(1) அப்பா (2) சித்தப்பா (3) பெரியப்பா

(05) வசந்தியின் வயது 5 ஆகும். விமலாவின் வயது 9 ஆகும். அதன்படி, விமலாவின் வயது எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் வசந்தியின் வயதைப் போன்று மூன்று மடங்காகக் காணப்பட்டது,

(1) 4 வருடங்களுக்கு முன் (2) 2 வருடங்களுக்கு முன் (3) 3 வருடங்களுக்கு முன்

(06) 

இவ்வுருவினுள்  போல எத்தனை உருக்களை வெட்டி எடுக்கலாம்?

(1) 8 (2) 6 (3) 5

(07) பின்வரும் உருவிலுள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | 8 | 10 |
| 20 | 18 | | 14 | 12 |
| 22 | | | 28 | 30 |
| 40 | 38 | | 34 | 32 |

(1)

| | |
|---|---|
| | 16 |
| 24 | 26 |
| | 36 |


(2)

| | |
|---|---|
| | 16 |
| 26 | 24 |
| | 36 |

(3)

| | |
|---|---|
| | 16 |
| 23 | 25 |
| | 37 |

(08)




சதுர வடிவமான கடதாசி ஒன்றை படத்தில் காட்டியவாறு மடித்த பின் அதில் முக்கோண வடிவத் துண்டொன்று வெட்டி நீக்கப்பட்டால், நீக்கிய பகுதியினுள் உள்ள முக்கோண வடிவத் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 4

(09) 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின், 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி என்ன கிழமையாகும்?

(1) புதன்கிழமை (2) செவ்வாய்க்கிழமை (3) வியாழக்கிழமை

Kalvi.lk


(10) குறித்த வீதியொன்றில் சிவப்பு, மஞ்சள், மஞ்சள், சிவப்பு, மஞ்சள், மஞ்சள், சிவப்பு ............. என்ற ஒழுங்கில் கொடிகள் நடப்பட்டுள்ளன. முதலாவது கொடி சிவப்பு நிறமும் இறுதிக் கொடி மஞ்சள் நிறமும் ஆகும். நடப்பட்ட மொத்த கொடிகளின் எண்ணிக்கை 26 ஆகும். அதன்படி, நடப்பட்ட மஞ்சள் நிறக் கொடிகளின் எண்ணிக்கை,

(1) 17 (2) 16 (3) 25

(11) 1kg நிறையுடைய கண்ணாடிப் பாத்திரமொன்று கீழே விழுந்து நான்கு துண்டுகளாக சிதறிப் போனது. அதில் ஒரு கண்ணாடித் துண்டு 400g நிறையும் ஏனைய மூன்று கண்ணாடித் துண்டுகளும் சமனான நிறைகளில் காணப்பட்டன. அதன்படி, சிதறிப்போன ஏனைய துண்டொன்றின் நிறை,

(1) 150g (2) 200g (3) 100g

(12) தரம் 5 மாணவர்களில் சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே உருவில் தரப்பட்டுள்ளது.




ஒரு நிறத்தை மட்டும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை,

(1) 21 (2) 5 (3) 16

(13) 6 □ 3 = 30 □ 12 இதில் வெற்றுக்கூடுகளுக்கு வரவேண்டிய சரியான கணிதச் செய்கைகளை முறையே தெரிவு செய்க.

(1) பெருக்கல், கழித்தல் (2) வகுத்தல், கூட்டல் (3) பெருக்கல், வகுத்தல்

(14)




உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையானதாகும். அதன்படி, ○ இப்படிக்கல்லின் நிறையிற்கு சமனான நிறையுடைய படிக்கட்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 4

(15) "கணிதம்" எனும் சொல் குறியீடுகளினால் □△○✳ இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதன்படி, "அணிதல்" எனும் சொல்லை குறியீடுகளினால் எழுதினால் கிடைப்பது,

(1)  (2)  (3) 

(16)




கூட்டினுள் உள்ள உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(17) போட்டிப் பரீட்சை ஒன்றில் 25 வினாக்கள் வழங்கப்பட்டன. சரியாக விடையளிக்கப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் அவர் பெற்ற புள்ளியிலிருந்து 1 புள்ளி வீதம் கழிக்கப்படும். அதன்படி, 20 வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கும் ஒருவர் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள்,

(1) 70 (2) 75 (3) 85


(18) மேசையொன்றின் மீது சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை ஆகிய நிறப் பந்துகள் ஒன்று வீதம் உள்ளன. பிள்ளையொன்றிற்கு ஒன்றுக்கொன்று வித்தியாசமான நிறமுடைய 2 பந்துகள் வீதம் எடுப்பதற்கான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6

(19) குறிப்பிட்ட விலங்குப் பண்ணையிலுள்ள கோழிகளின் தலைகளினதும், கால்களினதும் மொத்த எண்ணிக்கை 48 எனின், அங்குள்ள கோழிகளின் எண்ணிக்கை,

(1) 16 (2) 14 (3) 18


(20)




A, B, C என்னும் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள மிகப் பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண்,

(1) 123 (2) 679 (3) 976

(21)




இவ்வுரு ஒரு கம்பிச் சட்டகத்தை காட்டுகின்றது. எறும்பொன்று A யிலிருந்து F மற்றும் E ஊடாக D வரை பயணித்தால், எறும்பு பயணித்த மொத்தத் தூரம்,


(1) 12cm (2) 10cm (3) 11cm

kalvi.lk

சுட்டெண்:-.......................................

(22) பேருந்து ஒன்று மணித்தியாலத்திற்கு 30km வேகத்தில் பயணித்தால், கொழும்பிலிருந்து சிலாபம் வரை செல்வதற்கு 2 மணித்தியாலங்கள் எடுக்கும். அப்பேருந்து மணித்தியாலத்திற்கு 60km வேகத்தில் பயணித்தால், கொழும்பிலிருந்து சிலாபம் வரை செல்வதற்கு எடுக்கும் நேரம்,

(1) 3 மணித்தியாலங்கள் (2) 1 மணித்தியாலம் (3) 4 மணித்தியாலங்கள்

(23) 

PEO , YES , TEAMS ஆகிய சொற்களை இடமிருந்து வலமாகவும், TOY எனும் சொல்லை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் 4 ஆவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் சொல்,

(1) ME (2) SO (3) APS


(24)

| | |
|---|---|
| 3 | 8 |
| 7 | 1 |

இவ்வெண்கள் நான்கினையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய நான்கு இலக்கங்களைக் கொண்ட 8000 இலும் கூடிய எண்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 4

(25) பின்வரும் உருக்களை ஏதோவொரு கோலத்திற்கேற்ப மீண்டும் ஒழுங்குபடுத்தும்போது சரிநடுவில் வரும் உருவைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.




(1) C (2) A (3) D

(26) மைதானத்தில் நடப்பட்டுள்ள ஒவ்வொரு நிறத்திலும் உள்ள கொடிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.





**அம்புக்குறிகளினால் காட்டப்படும் கருத்து**

**அதிகம் ←— குறைவு** **குறைவு —→ அதிகம்**

மைதானத்தில் ஒவ்வொரு நிறத்திலும் நடப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) மஞ்சள் - சிவப்பு - நீலம் (2) சிவப்பு - நீலம் - மஞ்சள் (3) நீலம் - சிவப்பு - மஞ்சள்

(27) 


அனில் A யிலிருந்து B வரை பயணம் செய்த பாதையை இவ்வுரு காட்டுகின்றது. அவன் மிகக் குறைந்த தடவைகள் தெற்குத் திசைக்குப் பயணித்தான். அதன்படி, அவன் மிகக் கூடிய தடவைகள் பயணித்தது,


(1) கிழக்குத் திசைக்கு (2) மேற்குத் திசைக்கு (3) வடக்குத் திசைக்கு


(28) பின்வரும் உரையாடலை வாசிக்குக.

**A** :- பேருந்து எத்தனை மணிக்கு வரும்?
**B** :- மகனே! பேருந்திலா, புகையிரதத்திலா போவீர்கள்?
**C** :- காலை 8.00 மணிக்கு அப்பா.
**D** :- நான் பேருந்தில் போவேன் அப்பா.
**E** :- அப்படியானால் விரைவாக செல்க. பேருந்து இன்னும் சில நிமிடங்களில் வரும்.

இவ்வுரையாடலை ஒழுங்குமுறையாக காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) B, D, A, C, E (2) D, A, B, E, C (3) E, C, A, B, D

(29) 


இவ்வுரு இரு பற்சில்லுகள் ஒன்றுடன் ஒன்று பொருத்தப்பட்டுள்ள முறையைக் காட்டுகின்றது. இரு பற்சில்லுகளும் அம்புக்குறிகள் காட்டும் திசைகளுக்கு சுழலும். தற்போது இவ்விரு பற்சில்லுகளில்  மற்றும்  எனும் இரு பகுதிகளும் சந்தித்துள்ளன.

அதன்படி, அவ்விதம் மீண்டும் சந்திக்கக்கூடிய இரு பகுதிகளாவன,

(1)  (2)  (3) 

(30)


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 15 | 35 | 20 | 25 | 10 | 30 |

மேலே தரப்பட்டுள்ள ஏழு இலக்கங்களையும் ஏறுவரிசைப்படுத்துவதற்கு எத்தனை இலக்கங்களை திருத்தி மீண்டும் எழுத வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 2


kalvi.lk

(31) மூன்று திண்மங்கள் இரண்டு வீதம் தராசில் நிறுக்கப்பட்டுள்ள முறைகளை கீழேயுள்ள உருக்கள் காட்டுகின்றன.





அதன்படி,  ஆகிய மூன்று திண்மங்களின் மொத்த நிறை,

(1) 9kg (2) 18kg (3) 12kg

(32) 


உருவில் வட்ட வடிவான பாதையொன்று காட்டப்பட்டுள்ளது. இரு பிள்ளைகள் A என்னும் இடத்தில் இருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு, அம்புக்குறி காட்டும் திசையில் ஓடினார்கள். ஒரு பிள்ளையின் வேகம் மற்றப் பிள்ளையின் வேகத்தின் இரு மடங்காகும். அதன்படி, இரு பிள்ளைகளும் சந்திக்கும் இடம்

(1) B (2) A (3) C

(33) 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,

(1) $\frac{1}{2}$ ஆகும். (2) $\frac{1}{2}$ விடக் குறைவாகும் (3) $\frac{1}{2}$ விட அதிகமாகும்.

(34) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனின் கற்றோர் சிறப்பு உடையன் - மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை
கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு


இப்பாடலில் எதன் சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது,

(1) கல்வி
(2) பணம்
(3) வீடு

(35) 


உருவில் காட்டப்பட்டுள்ளபடி, எட்டு செவ்வக வடிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இச்செவ்வக வடிவக் கடதாசி மடிக்கப்பட்ட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 3

(36) 


சீசோ ஒன்றின் மீது நின்றுகொண்டிருக்கும் இரு பிள்ளைகளை இவ்வுரு காட்டுகிறது. இந்த சீசோ சமநிலையுடையது. அதன்படி, கீழேயுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) அனிலினதும் குமாரினதும் நிறைகள் சமனாகும்.
(2) குமாரை விட அனில் நிறை கூடியவன்.
(3) அனிலை விட குமார் நிறை கூடியவன்.

(37) 

A B


மேலேயுள்ள A, B ஆகிய கடதாசிக் கீலங்கள் இரண்டினையும் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்தால் உருவாக்கக்கூடிய 2 ஆங்கில எழுத்துக்கள்,

(1) T, E (2) M, W (3) N, W

(38)  = IX ,  = VI ,  = VIII ,  = X


உரோம எண்குறிகளின் பெறுமதி அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(39) 


A எனும் உருவில் காட்டப்பட்டுள்ள சதுர வடிவமான கம்பிச் சட்டகத்தை P எனும் இடத்தில் வெட்டி விரிப்பதன் மூலம் B உருவில் காட்டப்பட்டுள்ள முறையில் எல்லா பக்கங்களும் நீளத்தில் சமனான முக்கோணம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அம்முக்கோணத்தின் ஒரு பக்கத்தின் நீளம்,

(1) 10cm (2) 12cm (3) 8cm

(40) 


இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, A, B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்கள்,

(1) A = 2, B = 16 (2) A = 1, B = 8 (3) A = 1, B = 10

Education கல்வி kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023
தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-04

## வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

**(01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

நரி அங்கும் இங்குமாக அலைந்தது. நன்றாக பழுத்த திராட்சைப் பழங்கள் குலை குலையாக தொங்கியதைக் கண்டது. ஆவலுடன் பழங்களைப் பறிப்பதற்கு மரத்தில் ஏற முயன்றது. ஆனால் நரி தோல்வி அடைந்தது. அப்போது பலமான காற்று வீசியது. திராட்சைப் பழங்கள் கீழே விழுந்தன. நரி சந்தோசமாக அதனை உண்டது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) பந்தியில் வந்துள்ள பெயரடைமொழி சொல் யாது? ..............................................

(ii) "வெற்றி" என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக. ..............................................

(iii) காகம் - கரையும் என்பதுபோல நரி - ..............................................

(iv) பந்தியில் வந்துள்ள இணைமொழி யாது? ..............................................

(v) "அலைந்தது" என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. ..............................................

**(02) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) உயர்திணை முன்னிலை ஒருமைப் பெயர்ச்சொல் :- ( எங்கள் , நீ , அது )

(ii) அஃறிணை படர்க்கை பன்மை வினைச்சொல் :- ( பறந்தன , சென்றோம் , விளையாடினர் )

**(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள அடைப்பிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( கசப்பு , சிரித்தல் , குளிர் , கண் , எழுதுதல் , நகம் )

(i) தொழிற்பெயர்களை தெரிவுசெய்து எழுதுக. .............................................. , ..............................................

(ii) சினைப்பெயர்களை தெரிவுசெய்து எழுதுக. .............................................. , ..............................................

(iii) குணப்பெயர்களை தெரிவுசெய்து எழுதுக. .............................................. , ..............................................

**(04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள நிறுத்தக்குறிகளின் பெயர்களை எழுதுக.**

"ஐயோ! பீங்கான் கீழே விழுந்ததா?" என அம்மா கேட்டார்.

(i) .............................. (ii) .............................. (iii) .............................. (iv) ..............................

**(05) பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(i) பசு :- .............................................. (ii) பாம்பு :- ..............................................

**(06) பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுத்துப்பிழைகளை நீக்கி திருத்தமான வாக்கியமாக எழுதுக.**

காட்டு யாணை வயழுள் புகுந்து பயிறை நாசம் செய்தது.

..............................................................................................

**(07) பின்வரும் உவமைத் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.**

(i) கல்மேலேழுத்துப்போல :- .............................................. (ii) உருவும் நிழலும்போல :- ..............................................

**(08) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுவாயை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(i) .............................................. சந்தைக்குச் சென்று பழங்கள் வாங்கினாள்.

(ii) .............................................. அக்காவுடன் தொலைபேசியில் உரையாடினேன்.

(iii) .............................................. பாடநூல்களை கவனமாகப் பயன்படுத்துவோம்.

Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

**(09) பின்வரும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக எழுதுக.**

வேகமாக வந்த கார் திடீரென மரத்தில் மோதியது.

(i) .................................................... (ii) ....................................................

**(10) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) Don't waste water :- ....................................................

(ii) Where do you live? :- ....................................................

**(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

(i) I live .................. ( an / in ) Colombo. (ii) I ................ ( have / has ) one nose.

**(12) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**

(i) வால் :- .................................... (ii) மேசை :- ....................................

**(13) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**


(i) யஹலுவா :- .................................... (ii) வ(த்)துர :- ....................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

உங்கள் ஊர் எது? :- ....................................................

(15) ஒரு செங்கற் குவியலில் 10000 செங்கற்கள் உள்ளன. அதிலிருந்து 100 செங்கற்கள் அகற்றப்பட்டன. அதன்படி, தற்பொழுது செங்கற் குவியலிலுள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது? ....................................

(16)



இவ்வுருவில் நிழற்றியுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ....................................

(17) சதுரமுகியொன்றின் உச்சிகளின் எண்ணிக்கையை விட விளிம்புகளின் எண்ணிக்கை எத்தனை அதிகமாகும்? ..................


(18) 3 மாம்பழங்களை வாங்கிக்கொண்டு நான் வியாபாரிக்கு ரூபாய் 100.00 நாணயத் தாளொன்றைக் கொடுத்தபோது, வியாபாரி எனக்கு ரூபாய் 40.00 ஐ மீதிப் பணமாகக் கொடுத்தார். அதன்படி, மாம்பழமொன்றின் விலை யாது? ..................

(19) பி.ப 4.00 மணிக்கு 20 நிமிடங்கள் இருக்கும்போது சியானா படிக்க ஆரம்பித்தாள். பி.ப 5 மணி கடந்து 30 நிமிடத்திற்கு அவள் படித்து முடித்தாள். அதன்படி, அவள் படித்த மொத்த நேரம் யாது? ..................

(20) பிள்ளையொன்று இரு கைகளையும் இரு பக்கமாக நீட்டியவாறு தெற்குத் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதன்படி, அப்பிள்ளையின் வலதுக் கை திரும்பியிருக்கும் திசை யாது? ..................

(21) **E, S, N, M, Z, Y** ஆகிய ஆங்கில எழுத்துக்களில் சமச்சீர்க் கோடுகள் வரைய முடியாத ஆங்கில எழுத்துக்களை எழுதுக. ....................................

(22)




உருவில் உரோம எண்குறிகள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான உரோம எண்குறியை வெற்றுவட்டத்தினுள்ளேயே எழுதுக.

(23) பலகையொன்றின் நீளம் 2m 80cm ஆகும். இன்னுமொரு பலகையின் நீளம் 4m 60cm ஆகும். அதன்படி, இரு பலகைகளினதும் மொத்த நீளத்தை மீற்றர், சென்ரிமீற்றர்களில் எழுதுக. ....................................

(24)

```
    5  □  9
 -  □  4  3
 ---------
    3  8  6
```

அருகில் காட்டப்பட்டுள்ள வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான இரு இலக்கங்களையும் வெற்றுக்கூடுகளின் உள்ளேயே எழுதுக.

kalvi.lk

சுட்டெண்:-..............................................

(25) பாத்திரமொன்றில் $1l\ 600ml$ பழச்சாறு இருந்தது. அதனுடன் $4l\ 800ml$ நீரைக் கலந்து பழப்பானம் தயாரிக்கப்பட்டது.

தயாரிக்கப்பட்ட பழப்பானத்தின் மொத்த அளவு யாது? ..............................................................................

(26) விஜயரத்தினம் மகா வித்தியாலயத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து எண்பத்தாறு ஆகும். அல் ஹிலால் மகா வித்தியாலயத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்கு ஆகும். அதன்படி, இரு பாடசாலைகளிலும் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை இலக்கங்களில் எழுதுக. ..................................................

(27) | 6702 | | 6207 | | 6072 | | 6270 | | 6970 |

மேலே இலக்கங்களையுடைய கார்ட்போர்ட் அட்டைகளை பெறுமதி குறைந்துச் செல்லும் ஒழுங்கில் வைத்தால், சரிநடுவில் வரும் கார்ட்போர்ட் அட்டை எது? ..............................................................................

(28) ............................. = 7000 + 900 + 60 + 7 இன் பெறுமானத்தை வெற்றிடத்தில் எழுதுக.

(29) கமல் ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் ஆறு விசுக்கோத்துக்கள் வீதம் உண்பான். அதன்படி, அவனிற்கு ஒரு வாரத்திற்கு தேவைப்படும் விசுக்கோத்துக்களின் எண்ணிக்கை யாது? ..............................................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) தனித்து நடமாடாத ஓர் பறவை,
(1) செண்பகம் (2) புறா (3) குயில்

(31) பின்வரும் தராசுகளிலில் மிகச் சரியான நிறையை நிறுக்கக்கூடிய தராசு,
(1) 
(2) 
(3) 

(32) சர்வதேச முதியோர் தினத்தன்று கொண்டாடப்படுவது,
(1) சர்வதேச சுற்றாடல் தினம் (2) சர்வதேச சிறுவர் தினம் (3) சர்வதேச நீர் தினம்

(33) இலங்கையில் மிகக் கூடிய மாவட்டங்களைக் கொண்ட மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை,
(1) 5 (2) 6 (3) 4

(34) கீரை வகைகளுள் அடங்காதவை,
(1) பொன்னாங்கண்ணி, கங்குன் (2) பசளி, வல்லாரை (3) சோளம், எள்ளு

(35) 
இலங்கை தேசப்படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள மாகாணம்,
(1) மத்திய மாகாணம் (2) வடமத்திய மாகாணம் (3) வட மாகாணம்

(36) பின்வருவனவற்றுள் உணவு உண்ணல் தொடர்பான நற்பழக்கங்களுள் அடங்காதது,
(1) உடனடி உணவுகளை அடிக்கடி உண்ணுதல். (2) வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உணவை உண்ணுதல்.
(3) போதுமான அளவு உணவை மட்டும் பகிர்ந்துக் கொள்ளுதல்.

(37) இலங்கைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) இலங்கைக்கு மிக அண்மையில் இந்தியா அமைந்துள்ளது.
(2) இலங்கை இந்தியாவிற்கு வடக்குத் திசையில் அமைந்துள்ளது.
(3) இலங்கை இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஒரு தீவாகும்.

(38) அதிகளவான நீர்வீழ்ச்சிகளைக் கொண்ட மாவட்டம்,
(1) அனுராதபுரம் (2) அம்பாந்தோட்டை (3) இரத்தினபுரி

(39) பொது வாகனங்களில் பயணிக்கும்போது கடைப்பிடிக்கக்கூடாத பழக்கம்,
(1) கட்டாயமாகப் பயணச்சீட்டுப் பெறுதல். (2) பேருந்துகளில் முன் பக்கத்தில் ஏறி பின் பக்கத்தில் இறங்குதல்.
(3) ஒருவர் பின் ஒருவராக ஏறுதல் அல்லது இறங்குதல்.

(40) இலங்கையில் மிக முக்கியமான துறைமுகங்கள் அமைந்துள்ள நகரங்கள் அல்லாதது,
(1) கொழும்பு, காலி (2) அம்பாந்தோட்டை, திருகோணமலை (3) நீர்கொழும்பு, களுத்துறை

(41) இலங்கையில் அமைந்துள்ள மிக நீளமான ஓயா,
(1) மல்வத்து ஓயா (2) கிரிந்தி ஓயா (3) தெதுறு ஓயா


(42) பயிர்களின் இலைகளுக்கு அதிகம் சேதம் விளைவிக்கும் பிராணி,
(1) கறையான் (2) வெட்டுக்கிளி (3) ஈசல்

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

(43) சட்டக்காந்தமொன்றின் வடமுனை, தென்முனை என்பவற்றைக் குறிக்கும் நிறங்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) நீலம், சிவப்பு (2) சிவப்பு, பச்சை (3) சிவப்பு, நீலம்

(44) பருகுவதற்கு மிகவும் உகந்த நீர்,
(1) கொதித்தாறிய நீர் (2) வடிகட்டிய நீர் (3) ஆற்று நீர்

(45) "வானத்திலிருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்" எனும் கூற்றினை கூறிய மன்னன்,
(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு


(46) பண்டைய கலைப்படைப்பாகிய "கொடி அலங்காரம்" காட்டும் உரு,
(1)  (2)  (3) 

(47) 
இவ்வுரு நம் நாட்டிற்குப் பெரும் சேவையாற்றிய ஒரு தேசிய வீரரைக் காட்டுகிறது. அவரது பெயர்,
(1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (2) ஆதர் சி. கிளாக்
(3) கலாநிதி ரீ. பீ. ஜாயா

(48) பனிக்கட்டிகளைக் கரையாமல் நீண்ட காலம் வைத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் முறை அல்லாதது,
(1) பனிக்கட்டிகளின் மேல் உப்புத்தூளை பரவி மூடி வைத்தல் மூலம்.
(2) பனிக்கட்டிகளை ரெஜிபோம் பெட்டியில் இட்டு மூடி வைத்தல் மூலம்.
(3) பனிக்கட்டிகளின் மேல் மரத்தூளைப் பரவி மூடி வைத்தல் மூலம்.

(49) கால்களினால் தனக்கு தேவையான இரையைப் பற்றிக்கொள்ளும் பறவை,
(1) கொக்கு (2) செண்பகம் (3) பருந்து

(50) நிலைக்குத்தான சுவர்களில் பயணிப்பதற்கு ஒட்டும் தன்மையுடைய விசேடமான பாதங்களைக் கொண்ட பிராணி,
(1)  (2)  (3) 

(51) 

இவ்வுருவினால் இலங்கையின் தேசியக் கொடி காட்டப்பட்டுள்ளது. இங்கு A, B, C, D ஆகிய ஆங்கில எழுத்துக்களின் மூலம் குறிக்கப்பட்டுள்ள நிறங்கள்,
(1) A - மஞ்சள், B - செம்மஞ்சள், C - பச்சை, D - சிவப்பு
(2) A - செம்மஞ்சள், B - பச்சை, C - மஞ்சள், D - சிவப்பு
(3) A - சிவப்பு, B - பச்சை, C - செம்மஞ்சள், D - மஞ்சள்.

(52) கிராமிய விளையாட்டொன்று,
(1) பல்லாங்குழி (2) கரம் (3) சதுரங்கம்

(53) கரோல் பாடல் நிகழ்வுகளை நடத்தும் சமயத்தவர்கள்,
(1) பௌத்தர்கள் (2) கிறிஸ்தவர்கள் (3) இஸ்லாமியர்கள்

(54) பருத்தித்துறைமுனை, தேவேந்திரமுனை ஆகியவை அமைந்துள்ள மாகாணங்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) வட மாகாணம், தென் மாகாணம் (2) கிழக்கு மாகாணம், மேல் மாகாணம் (3) தென் மாகாணம், வட மாகாணம்

(55) வாகனமொன்றில் தடைப்பூட்டு பிரயோகிக்கும்போது ஒளிரும் விளக்கின் நிறம்,
(1) மஞ்சள் (2) வெள்ளை (3) சிவப்பு

(56) அஞ்சலோட்டப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை,
(1) 6 (2) 4 (3) 8

(57) ஐந்து சோடிக் கால்களைக் கொண்ட பிராணி,
(1) நண்டு (2) மரவட்டை (3) உண்ணி

(58) ஆபத்தின்போது தமது உடலைச் சுருட்டிக்கொள்ளும் பிராணி,
(1) நத்தை (2) பச்சோந்தி (3) மரவட்டை

59) பின்வரும் பூக்களில் அடுக்கிதழ்களைக் கொண்ட பூக்களைத் தெரிவு செய்க.
(1) ஓகிட், அலரி (2) தாமரை, ரோஜா (3) மல்லிகை, நாகமலர்

**50) "மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவோம்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(3) ..........................................................................................

Education கல்வி அடியாபன
kalvi.lk